**திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: திரு.சி.சுவாமிமுத்தழகன்.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,**

**ந.க.எண்.4685/அ1/2024 நாள்: .12.2024**

பொருள்: பள்ளிக்கல்வி - அமைச்சுப்பணி - திருவண்ணாமலை மாவட்டம் - செங்கம் வட்டாரக்கல்வி அலுவலகம், இளநிலை உதவியாளர் க.அருணாசலம் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 02.12.2013 பிற்பகல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க கோருதல் - சார்பு.

பார்வை:

1. திருவண்ணாமலை மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 3564/அ1/2023 நாள்:27.11.2013
2. அரசாணை (நிலை) எண். 101, பள்ளிக்கல்வி (வரவு செலவுத் திட்டம் ) துறை நாள்.18.05.2018
3. திருவண்ணாமலை மாவட்டக்கல்வி அலுவலரின் (தொடக்கக்கல்வி) கடிதம் ந.க.எண். 1030/அ1/2024 நாள்,02.05.2024

**************

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.க.அருணாசலம் என்பாருக்கு பார்வை (1) காணும் திருவண்ணாமலை மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 02.12.2013 பிற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்து ஆணை வேண்டிய கருத்துவினை பார்வை (2) இல் திருவண்ணாமலை மாவட்டக் கல்வி அலுவலரால் (தொடக்கக்கல்வி) பரிந்துரை செய்து இவ்வலுவலகம் பெறப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டக் கல்வி அலுவலரால் (தொடக்கக்கல்வி) பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் 02.12.2013 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும், பணிவரன்முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகாலம் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யவேண்டுமென்று ஆணையிடப்படுகிறது.

மேற்காண் பொருள் சார்ந்து சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த வட்டாரக்கல்வி அலுவலருக்கு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு

3/12/24

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை.

2/12/24

பெறுநர்- வட்டாரக் கல்வி அலுவலர், செங்கம்.

நகல்- 1. மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) திருவண்ணாமலை.

2. சம்பந்தப்பட்ட பணியாளர் (வட்டாரக்கல்வி அலுவலர் மூலமாக)

ATTESTED
23/12/24